# பெரியகுளம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2015–2016

## துவக்கம் :–

இந்நகர மக்களின் நல்வாழ்வு வசதிகளை நகர மக்களால் நியமிக்கப்பட்ட சுகாதார சங்கம் 31.03.1886 வரை கவனித்து வந்தது. மக்களின் வேண்டுகோளின்படி, 01.04.1886–லிருந்து ''பெரியகுளம் நகராட்சி'' ஆக இயங்க அரசினரால் ஆணையிடப்பட்டது. ஆரம்ப காலத்தில் மூன்று அதிகாரிகளும் முப்பது நகர்மன்ற உறுப்பினர்களாக அரசினரால் நியமிக்கப்பட்டனர்.

## அமைப்பும் நிர்வாகமும் :–

நகராட்சி நிர்வாக அதிகார எல்லை வரம்பில் 2015–2016ம் ஆண்டில் எவ்வித மாறுதலின்றி தொடர்ந்து 2.11 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளதாக இருந்துள்ளது. வடகரை, கீழவடகரை, தென்கரை ஆகிய மூன்று நிலவரி கிராமப்பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்து வருகிறது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 42966 ஆகும்.

அரசினரின் 09.09.1966–ம் தேதிய 2145 (கிராம நலம் உள்ளாட்சித் துறை) எண் ஆணைப்படி 22.9.1966 முதல் இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகிறது.

## மன்றம் :–

அறிக்கையாண்டில் நகராட்சியின் எல்லைகளிலும், வார்டுகளில் மாற்றம் எதுவும் இல்லை. நகரம் 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வார்டு பிரிவினை செய்ய அறிவுரை வழங்கி வரலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 11.6.1996ம் நாளிட்ட அரசாணை எண்.135–ன்படி இந்நகராட்சி பகுதி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 20.8.1996 நாளிட்ட அரசு ஆணை எண். 189ன்படி வார்டுகள் 8, 25, 28, 29 ஆதி திராவிட வகுப்பிற்கும் (வார்டு 8, 25 பெண்களுக்கும்), பொது வார்டுகள் 9, 10, 11, 20, 22, 23, 27, 30 பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் திரு.ஓ.ராஜா அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திரு.ஜி.முகுந்தன் அவர்கள் நகர்மன்றத் துணைத்தலைவராகவும், இருந்து வருகிறார்கள். நகர்மன்ற உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு.

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|
| 1. | திரு.வெ.செல்லத்துரை |
| 2. | திரு.கோ.முகுந்தன் |
| 3. | திரு.ரா.தனராஜ் |
| 4. | திரு.அ.கண்ணன் |
| 5. | திரு.எம்.அப்துல்சமது |
| 6. | திரு.ரா.தங்கராஜ் |
| 7. | திரு.ஏ.ராஜாமுகமது |
| 8. | திருமதி.மு.பவானி |
| 9. | திருமதி.சை.ஆயிஷா |
| 10. | திருமதி.ச.பாரதி |
| 11. | திருமதி.சே.முத்துமாரியம்மாள் |
| 12. | திரு.சு.குபேந்திரன் |
| 13. | திரு.வீ.கந்தசாமி |
| 14. | திரு.ஆ.பாண்டியன் |
| 15. | திரு.அ.கார்த்திக் |
| 16. | திரு.ஆ.செட்டியப்பன் |
| 17. | திரு.ஏ.மருததுரை செல்வம் |
| 18. | திரு.வை.ராஜகோபால் |
| 19. | திரு.ஆர்.கருப்பையா |
| 20. | திருமதி.நா.அமுதவள்ளி |
| 21. | திரு.ஹ.சம்சுதீன் |
| 22. | திருமதி.கே.சீத்தாலட்சுமி |
| 23. | திருமதி.பா.முத்துலெட்சுமி |
| 24. | திரு.அ.சுதாகர் |
| 25. | திருமதி.ச.பாண்டிச்செல்வி |
| 26. | திரு.கே.கார்த்திக் |
| 27. | திருமதி.த.மஹ்ஜபின் |
| 28. | திரு.வீ.சந்திரன் (இறப்பு) |
| 29. | திரு.பா.சக்திவேல் |
| 30. | திருமதி.ப.புஷ்பராணி |

**<u>ஆணையாளர்</u> :–**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்.

| பதவி விபரம் | பெயர் | காலம் |
|---|---|---|
| ஆணையாளர் | திருமதி.அ.மாணிக்கஅரசி | 01.04.2015 முதல் 31.03.2016 வரை |
| பொறியாளர்<br>பொறியாளர் (பொ)<br>பொறியாளர்<br>பொறியாளர் | திரு.V.சுப்பிரமணியன்<br>செல்வி.வ.மலர்க்கொடி<br>திரு.சி.ராஜாராம்<br>திரு.ஆர்.திருமலைவாசன் | 01.04.2015 முதல் 23.09.2015 வரை<br>24.09.2015 முதல் 12.10.2015 வரை<br>13.10.2015 முதல் 09.03.2016 வரை<br>10.03.2016 முதல் 31.03.2016 வரை |
| மேலாளர் | திருமதி.பா.புஷ்பலதா | 01.04.2015 முதல் 31.03.2016 வரை |

**<u>தேர்தல்</u> :–**

அறிக்கையாண்டில் கூட்டப்பட்ட நகர்மன்ற கூட்டங்களின் எண்ணிக்கை வருமாறு:–

| | | <u>எண்ணிக்கை</u> |
|---|---|---|
| சாதாரண கூட்டங்கள் | – | 4 |
| அவசர கூட்டங்கள் | – | 5 |
| சிறப்புக் கூட்டங்கள் | -- | 1 |

மொத்தம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் = 295

மன்றம் தம் முன்பு பரிசீலனைக்கும் முடிவுக்கும் கொண்டுவரப்பட்ட பொருள்கள் அனைத்தையும் முடிவு செய்துள்ளது.

**<u>பொது நிர்வாகம்</u> :–**

அலுவலக பணியாளர்களுக்கு அறிக்கை ஆண்டில் ஊதியத்திற்கென ரூ.2,11,87,900/– செலவிடப்பட்டுள்ளது.

**<u>பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பிரிவு</u> :–**

| | | |
|---|---|---|
| 1. நகராட்சி பொறியாளர் | – | 1 |
| 2. குடிநீர் திட்ட மேற்பார்வையாளர் | – | 1 |
| 3. பணி ஆய்வர் | – | 1 |
| 4. மின்பணியாளர் கிரேடு–2 | – | 1 |
| 5. பார்க் கார்டனர் | – | 1 |
| 6. டிரைனேஜ் கிளீனர் | – | 2 |
| 7. மின்கம்பியாளர் | – | 1 |
| 8. மின் உதவியாளர் | – | 2 |
| 9. பம்ப்உறவுஸ் காவலர் | – | 1 |
| 10. மிட்சுபிசி பவர்டில்லர் டிரைவர் | – | 1 |
| 11. சூயேஜ் கிளீனர் | – | 4 |
| 12. கேங்கூலி | – | 2 |
| 13. சூயேஜ் கூலி | – | 6 |
| 14. குடிநீர் லாரி ஓட்டுனர் | – | 1 |

இம்மன்றத்தினரால் பராமரிக்கப்பட்டு சென்ற ஆண்டு இறுதியில் இருந்த சாலைகளின் விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. சிமிண்ட் தளம் | – | 3.81 கி.மீ. |
| 2. தார் தளம் | – | 18.32 கி.மீ. |
| 3. பேவர் ப்ளாக் | – | 9.72 கி.மீ |
| 4. மொத்தம் | – | **31.85 கி.மீ.** |

**<u>பாலங்கள்</u> :–**

இந்நகராட்சி எல்கைக்குள் தற்போது மூன்று பாலங்கள் உள்ளன. மேற்படி பாலங்களில் ஒன்று நெடுஞ்சாலை இலாகா பொறுப்பிலும், மற்ற இரண்டு பாலங்களும் பொதுப்பணி துறை பராமரிப்பிலும் உள்ளன.

**<u>பாலங்கள் விபரம்</u>**

1) கம்பம் சாலை பாலம் (நெடுஞ்சாலை)
2) ஆடுபாலம் (பொதுப்பணித்துறை)
3) புதுப்பாலம் (பொதுப்பணித்துறை)

**<u>கருவிகளும் தளவாடங்களும்</u> :–**

தீ அணைப்பு கருவிகள் – 4 எண்ணம்

**<u>இதர கருவிகள்</u> :–**

| | | |
|---|---|---|
| மினி லாரி | – | 1 |
| டிராக்டர் டிரைலருடன் | – | – |
| தள்ளு வண்டிகள் | – | 40 |
| காற்றடிக்கும் கருவி | – | – |
| ஜீப் | – | 1 |
| குடிநீர் டேங்கர் மினி லாரி | – | 1 |
| டம்பர் பிளேசர் | – | 2 |
| பிரண்ட் எண்ட் லோடர் | – | 1 |
| ஜெட்ராடிங் இயந்திர வாகனம் | – | 1 |
| மினி டிப்பர் லாரி | – | 2 |

**<u>விளக்குகள்</u> :–**

நகராட்சியில் தெருவிளக்குகள் அனைத்தும் பராமரிப்பு பணி தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு, Sri.Ramakrishna Electricals, Dindigul நிறுவனம் மூலம் 02.12.2015ம் தேதி வரை பராமரிக்கப்பட்டு வந்தது. அதனை தொடர்ந்து மேற்படி பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மறு ஒப்பந்தப்புள்ளி கோரி 01.03.2016 முதல் Sadaiyandi Agencies Andipatti (Tk) நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகரில் கீழ்கண்ட விபரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. T5 1 X 24 வாட்ஸ் CFL | – | 1200 |
| 2. T5 4 X 24 வாட்ஸ் CFL | – | 116 |
| 3. உயர்மின் கோபுர விளக்கு | - | 5 |
| 4. மெட்டல் அலாய்டு | – | 20 |
| 5. 40 வாட்ஸ் குழல் விளக்கு 4' | - | 237 |
| **மொத்தம்** | – | 1578 |

அறிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பிற்கென ரூ. 16.83 லட்சம் செலவிடப்பட்டு உள்ளது.

**<u>கல்வி</u> :–**

இந்நகராட்சியால் ஐந்து ஆரம்ப பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வந்தது. அரசினரின் 09.03.90ம் தேதிய 347–ம் எண் அரசாணையின்படி 01.04.90 முதல் கல்வித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி துறையின் பராமரிப்பில் உள்ளது. தற்போது 3 நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு மட்டும் இந்நகராட்சியின் வசம் உள்ளது.

**<u>உயர்நிலைக் கல்வி</u> :–**

இந்நகராட்சியால் உயர்நிலைப்பள்ளிகளோ மேல்நிலை பள்ளிகளோ பராமரிக்கப்படவில்லை.

**<u>நூல் நிலையங்கள் படிப்பகங்கள்</u> :–**

வடகரையில் ஒன்றும், தென்கரையில் ஒன்றுமாக இரண்டு நூலகங்கள் தொடர்ந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி இரண்டு அலுவலகங்களும் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் ஆளுகைக்குட்பட்டது ஆகும்.

**<u>புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்</u> :–**

நகராட்சி பள்ளிகள் மூன்றிலும் பள்ளி மதிய உணவு திட்டம் செயல்பட்டு வருகிறது. 5 முதல் 9 மற்றும் 10 முதல் 14 வயதிலுள்ள குழந்தைகள் கீழ்கண்ட எண்ணிக்கையில் பயன்பெற்று வருகிறார்கள். நகராட்சிப் பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளி சத்துணவு மையங்கள் 27. 17.10.98 முதல் இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

| 5 – 9 | 10 – 14 | மொத்தம் |
|---|---|---|
| 2664 | 2674 | 53338 |

இவர்களுக்கு தினசரி 100 கிராம் அரிசி, 150 கிராம் பருப்பு, 0.019 கி.கி. உப்பும் மற்றும் 3 கிராம் எண்ணெய் செலவிடப்பட்டு வருகிறது. 20 கிராம் காய்கறி 20 கிராம் மளிகை சாமான்கள் மற்றும் எரிபொருட்கள் செலவிற்காக நபர் ஒன்றுக்கு 0.35 பைசா வீதம் செலவிடப்படுகிறது.

இத்திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு சமூகநல மற்றும் சத்துணவுத் திட்ட துறையின் அரசாணை (நிலை) எண்.234 (நிதித்துறை) நாள்.01.06.2009ன்படி கீழ்கண்டவாறு ஊதியம் வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அமைப்பாளர் | – | 2500–5000+500 G.P. |
| 2. | உதவியாளர் | – | 1300–3000+300 G.P. |
| 3. | சமையலர் | – | 950–2000+200 G.P. |

<u>மருத்துவமனை</u> :–

இந்நகர் மன்றத்தினரால் முதல் முதலில் ஒரு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. நகராட்சியிடம் போதிய நிதி வசதியின்மையால் 1913–15–ம் ஆண்டில் ரூ.58,000/– அரசு மான்யம் ஆகப் பெற்றும் ரூ.5,405/– நகர்மன்ற நிதியிலிருந்தும் செலவு செய்தும் புதிய மருத்துவமனை கட்டிடம் எழுப்பப்பட்டது.

இப்புதிய மருத்துவமனை 22.12.1921–ல் துவக்கப்பட்டு வேல்ஸ் இளவரசரின் சென்னை வருகையின் நினைவாக 1922–ம் ஆண்டு இம்மருத்துவமனைக்கு பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என பெயரிட்டு ஒரு சிவில் அசிஸ்டண்ட் சர்ஜன் மேற்பார்வையில் நகராட்சி நிறுவனமாக இயங்கி வந்தது. பின்னர், அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது.

இப்புதிய மருத்துவமனை நகரின் மேற்பகுதியில் உள்ளதால், இந்நகரின் கீழ்பகுதி வாழ் ஏழை மக்களின் மருத்துவ வசதியை கருத்தில் கொண்டு, நகர் மன்றத்தினரால் 1952–ம் ஆண்டில் ஒரு சித்தா மருத்துவமனை சொந்த கட்டிடத்தில் திறக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வந்தது. நகராட்சி சித்தா மருத்துவமனை அதிகாரி (டாக்டர்) பணியிடம் மற்றும் மருந்து கட்டுபவர்கள் பணியிடம் அறிக்கையாண்டில் காலியாக உள்ளது. மருந்து கலப்பவர் மாறுதல் ஆகி சென்றதை தொடர்ந்து இப்பணியிடம் 24.2.97 முதல் காலியாக உள்ளது.

| | | |
|---|---|---|
| சித்த மருத்துவ அதிகாரி | 1 | (காலியிடம்) |
| மருந்து கலப்பவர் | 1 | (காலியிடம்) |
| மருந்து கட்டுபவர்கள் | 2 | (காலியிடம்) |

அறிக்கையாண்டில் சித்தா மருத்துவமனை இயங்கவில்லை.

<u>மகப்பேறு மருத்துவமனைகள்</u> :–

அரசு மருத்துவமனையில் மகப்பேறு கவனிக்கப்பட்டு வருகிறது. நகரின் கீழ்பகுதியில் ஏழை மக்கள் அதிகம் வாழ்வதால் அவ்வமயம் நகர்மன்றத் தலைவராக இருந்த உயர்திரு.கே.எம்.எம்.மேத்தா அவர்களது பெருமுயற்சியின் காரணமாக காலஞ்சென்ற திரு.ஜெயராஜ் அவர்களது நினைவாக அன்னாருடைய குடும்பத்தினர் ரூ.1,00,000/– செலவில் நகராட்சிக்கு நன்கொடையாக கட்டிக்கொடுத்த ஜெயராஜ் அன்னபாக்கியம் நினைவு மகப்பேறு (நகராட்சி) இல்லம் 15.04.1974–ம் தேதியிலிருந்து துவங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

மகப்பேறு இல்லத்தில் கீழ்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| | |
|---|---|
| பெண் மருத்துவ அதிகாரி | 1 |
| மகப்பேறு உதவியாளர் | 1 (காலியிடம்) |
| மகப்பேறு ஆயா | 3 (1 காலியிடம்) |

இந்த அறிக்கையாண்டில் இம்மருத்துவமனையில் 72 பிறப்புகள் கவனிக்கப்பட்டது.

2000 மே 8 ஆம் தேதி முதல் RCHP செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்

1. செவிலியர் – 1
2. கம்ப்யூட்டர்–கம்–கிளர்க் – 1
3. பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் – 2 (1 காலியிடம்)

பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>தேசிய நகர் நல மையம் (NRHM) திட்டத்தின் கீழ்</u>**

1. லேப் டெக்னீசியன் – 1
2. மருந்தாளுநர் – 1
3. A.N.M. – காலியிடம் – 2
4. மருத்துவமனை பணியாளர் – காலியிடம் – 2

NCD - Programme
April 2014 - March 2015 திட்டத்தின் கீழ் – 1 செவிலியர்

| | | |
|---|---|---|
| Screening Hypertension | - | 2258 |
| SDM | - | 1894 |
| Screening CACX | - | 642 |
| Screening CABR | - | 649 |
| New Hypertension | - | 209 |
| Known c/o Hypertension | - | 43 |
| Total Patients | - | 2258 |
| CACX Positive | - | 27 |
| CABR Positive | - | 8 |
| Total Follow up Cases | - | 5317 |
| HT | - | 2595 |
| DM | - | 1508 |
| Both | - | 1214 |

தினந்தோறும் மேற்கண்ட மகப்பேறில்லத்தில் புற நோயாளிகள் பிரிவு இயங்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| செவ்வாய் | = | கர்ப்பிணி தாய்மார்கள் பரிசோதனை நாள் |
| திங்கள், புதன், சனி | = | அனைத்து நோயாளிகளும் பார்க்கும் நாள் |
| வியாழன், வெள்ளி | = | பள்ளி மாணவர்கள் பரிசோனை நாள் |
| மாலை | = | குழந்தையில்லாதவர்கள் & இனப்பெருக்க நோய்களுக்கான பரிசோதனை நடைபெற்று வருகிறது. |

**வெளிநோயாளிகள் :–**

**21399** மருத்துவ கவனிப்பு பெற்றனர்.

**2826** பேறுகால முன்கவனிப்பு கவனிக்கப்பட்டனர்.

**642** பால்வினை நோயாளிகள் கவனிக்கப்பட்டனர்.

**425** சிறார்கள் (1 வயது) கவனிக்கப்பட்டனர்.

L.T.

2014– 2015

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MAPiril | - | | | | | |
| RBS | - | 3378 | u/s | - | 1994 | upt - 368 |
| Sr.chol | – | 1119 | u/A | - | 1994 | |
| Sr. crea | - | 525 | Hb | - | 2056 | |

**ANC – OP**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| GCT | - | 307 | RBS | - | 110 | u/s | - | 310 |
| U/s | - | 310 | Hb | - | 302 | Sr. crea | - | 14 |

**நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் :–**

| | | |
|---|---|---|
| T.T.(E.M) | - | 515 |
| BCG | - | 425 |
| DPT Br | - | 476 |
| POLIO | - | 410 |
| MEASLES | - | 461 |
| Inj. Pentavalant | - | 442 |

**பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டம் :–**

அறிக்கையாண்டில் பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து **30** பள்ளிகளிலும், மாணவ/மாணவிகளுக்கான மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

| | |
|---|---|
| மொத்தமாக பரிசோதனை செய்யப்பட்ட மாணாக்கர்கள் | – **13164** பேர் |
| சிகிச்சையளிக்கப்பட்ட மாணாக்கர்கள் | – **12546** பேர் |
| மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்ட மாணாக்கர்கள் | – **160** பேர் |

கீழ்கண்டவாறு நோய் தடுப்பு ஊசிகளும் போடப்பட்டுள்ளது.

| | | ஆண் | | பெண் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 5% DPT | – | **414** | + | **438** | = | **852** |
| டி.டி. | | – | | – | = | –– |
| டி.டி. | 10 வயது | **356** | + | **333** | = | **689** |
| டி.டி. | 16 வயது | **338** | + | **639** | = | **977** |

**பிறப்பு விகிதமும், பிரசவ உதவியும் :–**

வடகரை, தென்கரை ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் **2** துப்புரவு ஆய்வரால் பிறப்பு, இறப்பிற்கான பதிவுகளை பதிவு செய்கிறார். நடப்பாண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை **1403** இறப்புகளின் எண்ணிக்கை **323** ஆகும்.

**<u>தணிக்கை</u> :–**

2014–15ஆம் ஆண்டு வரை தணிக்கை ஆய்வு நடைபெற்றுள்ளது. அறிக்கையாண்டில் ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. அறிக்கை ஆண்டின் துவக்கத்தில் தடைகளில் எண்ணிக்கை 806 ஆகும்.

**<u>இறப்பு விகிதமும், தொற்று கொள்ளை நோய்களும்</u> :–**

2015–2016ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புக்கள் 339 அவற்றிற்கான காரணங்களும் இறப்பு விகிதங்களும் பின்வருமாறு :–

| | | |
|---|---|---|
| வாந்தி பேதி | – | – |
| காய்ச்சல் | – | – |
| தொற்றுநோய் | – | – |
| இதர காய்ச்சல் (டெங்கு) | – | – |
| சீதபேதி | – | – |
| வயிற்றுபோக்கு (ஏ.டி.டி) | – | – |
| டைபாய்டு | – | – |
| சுவாச சம்பந்தமான இதர நோய் | – | 17 |
| பிரசவத்தின்போது இறந்த தாய்மார்கள் | – | – |
| இதர காரணங்கள் | – | 112 |
| | | 129 |

**<u>சுகாதார பராமரிப்பு</u> :–**

| | <u>முதல் பகுதி</u> | <u>2ம் பகுதி</u> | <u>மொத்தம்</u> |
|---|---|---|---|
| துப்புரவு சிப்பந்திகள் | 12 | 12 | 24 |
| பொது மல அறைகள் | –– | –– | –– |
| குப்பை தொட்டிகள் (Dumper Placer Bins) | 11 | 12 | 23 |

பேருந்து நிலையத்திலும், மார்கெட் பகுதியிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரண்டு நவீன கட்டண கழிப்பறைகள் உள்ளன. நகராட்சியில் துப்புரவு சிப்பந்திகள் பணிபுரிவதால் அவர்கள் குடியிருப்பதற்கு வடகரையில் 24 வீடுகளும் தென்கரையில் 20 வீடுகளும் மொத்தம் 44 வீடுகளும் மின் இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்நகராட்சியில் தனியார் வீடுகளில் உள்ள மலம் கழிவறைகள் குறைந்த செலவில் உள்ள மலப்பிறைகளாக மாற்றப்பட்டு வருவதால் மேற்படி மலம் எடுக்கும் பணி அல்லாத காரணத்தால் 43 துப்புரவு பணியாளர்களை பழனி நகராட்சிக்கு பணியிடங்களுடன் ஒப்படைக்கப்பட்டு அதற்கு பதிலாக 43 துப்புரரவ பணியாளர் பணியிடம் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>தனியார் பராமரிப்பு (Privatisation) :-</u>**

வார்டு 1 முதல் 25 வரை உள்ள பகுதிகளில் சுய உதவி குழு துப்புரவு பணியாளர்கள் 63 நபர்கள் மூலம் வீடு வீடாக குப்பை சேகரித்தல், கால்வாய் தூர்வாருதல், தெரு கூட்டுதல் ஆகிய சுகாதார பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>சுடுகாடும் இடுகாடும் :–</u>**

இரண்டு சுடுகாடுகளும் இரண்டு இடுகாடுகளும் நகர்மன்றத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. வடகரை சுடுகாட்டில் மின் மயானக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்திலிருந்து தடையின்மை சான்று பெற விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

**<u>குடிநீர் :–</u>**

பெரியகுளம் நகராட்சிக்கு 1905–ம் ஆண்டிலிருந்து கொடைக்கானல் பேரிஜம் ஏரியிலிருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது நகரில் கிழ்கண்ட விபரப்படி குழாய் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>பொதுக்குழாய் :–</u>**

| | | |
|---|---|---|
| பொதுக்குழாய் | – | 141 |
| வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை | – | 6557 |

**<u>அளவுமானி முறை :–</u>**

வீட்டு உபயோகத்திற்கு 1000 லிட்டருக்கு ரூ.10/– வீதம் குறைந்த கட்டணமாக ரூ.100/– வீதம் மாதம் 1க்கு வீட்டு உபயோகம் தவிர மற்றவற்றிற்கு 1000 லிட்டருக்கு ரூ.9/– உள்ள கட்டணத்தை திருத்தி அமைத்து மாதம் ஒன்றுக்கு ரூ.100/– அளவு 1000 லிட்டருக்கு ரூ.10.00 வீதம் 1.4.2013 முதல் அமுலுக்கு கொண்டுவர மன்றம் தனது 26.10.12ம் தேதிய தீர்மானம் எண்.363ல் தீர்மானிக்கப்பட்டு 1.4.2013 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் குடியிருப்பு அல்லாத காரியங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250/–என நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2013 முதல் வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது.

குடிநீர் தரத்தை தெரிந்து உயர்த்திக்கொள்வதற்காக அவ்வப்போது குடிநீர் மாதிரிகள் அரசினரால் சோதனை சாலைக்கு அனுப்பட்டு வருகிறது. குடிநீர் பிரிவில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| | |
|---|---|
| பொருத்துனர் | 1 |
| மின் பணியாளர் (தரம்–2) | 1 |
| குழாய் திருகி | 2 |
| குழாய் சுத்தம் செய்பவர் | 1 |
| தலைமைக் குடிநீர் நிலையம் சுத்தம் செய்பவர் | 1 |

<u>குடிநீர்ப் பணிகள்</u>

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (UIDSSMT) அரசாணை எண்.12, நாள்.27.01.2014ல் இந்நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்க்கொள்ள ரூ.1553.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 04.12.2014ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் இத்திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டவுடன் நகர மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 135 LPCD வீதம் குடிநீர் வழங்கப்படும்.

## திட்டப்பணிகள் 2015 – 2016

### I. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2015 – 2016</u> | |
| | 1. பெரியகுளம் நகராட்சி 27வது வார்டு தண்டுப்பாளையம் பள்ளிவாசல் பின்புறம் உள்ள தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 5.00 |
| | 2. பெரியகுளம் நகராட்சி 7வது வார்டு பட்டாப்புளி மேலத் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 5.00 |
| | 3. பெரியகுளம் நகராட்சி 30வது வார்டு ஆதி திராவிடர் மாணவியர் விடுதியில் கழிப்பிடம் கட்டுதல் | 3.00 |
| | 4.பெரியகுளம் நகராட்சி வார்டுகள் 1,3,4,16,17,19,25,27 ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் வார்டு எண்.7,8ல் ஆக மொத்தம் 10 இடங்களில் அடிபம்பு கழற்றி சுத்தம் செய்து மோட்டார், சின்டெக்ஸ் பொருத்துதல் பணி செய்தல் | 7.50 |
| | | **20.50** |
| 2. | <u>பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்</u> | |
| | 1. வடகரை பள்ளிவாசல் தெருவில் பேவர் பிளாக் பதித்தல் பணி மேற்கொள்ளுதல் | 6.00 |
| | 2. வடக்கு பாரஸ்ட் ரோடு, மற்றும் நரசிம்மன் சந்து ஆகிய பகுதியில் பேவர் பிளாக் பதித்தல் பணி மேற்கொள்ளுதல் | 7.00 |
| | 3. அமெரிக்கன் மிஷன் தெருவில் பேவர் பிளாக் பதித்தல் பணி மேற்கொள்ளுதல் | 7.00 |
| | | **20.00** |
| 3. | <u>2015–2016 – தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள்</u> | |
| | 1. பெரியகுளம் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் மேற்கூரையுடன் கூடிய (1/3) பிளாட்பார்ம் அமைக்கும் பணி செய்தல் | 24.50 |
| | 2. பெரியகுளம் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் மேற்கூரை இல்லாத பிளாட்பார்ம் அமைக்கும் பணி செய்தல் | 37.50 |
| | 3. பெரியகுளம் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி செய்தல் | 24.00 |
| | 4. பெரியகுளம் நகராட்சிக்கு 30 எண்ணம் தள்ளுவண்டிகள் சப்ளை செய்தல் | 7.20 |
| | 5. பெரியகுளம் நகராட்சிக்கு ஆர்கானிக் பல்வரைசர் சப்ளை செய்தல் | 3.00<br>30.00 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | 6. பெரியகுளம் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் குப்பை சேகரம் செய்யும் கூடம் கட்டும் பணி செய்தல்<br>7. Purchase a New High Performance Backhoe Loader<br>8. குப்பைக் கொள்கலன்கள் சப்ளை செய்யும் பணிகள்<br>9. IEC Activities | 35.00<br>19.20<br>2.00<br>-----<br>182.40<br>----- |
| | **2015–2016 – தூய்மை இந்தியா திட்டம் – சமுதாய கழிப்பறை கட்டும் பணி**<br><br>1. பெரியகுளம் நகராட்சி 1 மற்றும் 30 ஆகிய வார்டுகளில் சமுதாயக் கழிப்பறை கட்டிடம் கட்டும் பணிகள் செய்தல் – 10 அறைகள்<br>2. பெரியகுளம் நகராட்சி 16 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் சமுதாயக் கழிப்பறை கட்டிடம் கட்டும் பணிகள் செய்தல் – 10 அறைகள் | 6.50<br><br>6.50<br>-----<br>13.00<br>----- |

## 8. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் SJSRY – 2015–2016

இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதார முன்னேற்றம் அடையும் பொருட்டும் நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கவும் மத்திய அரசும், மாநில அரசும் முறையே 75:25 என்ற பங்கீட்டில் மான்யம் (நிதியை) அரசானது ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்து திட்டத்தை செயல்படுத்துகிறது. இவ்வாண்டு பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2013–14ன்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையாளரின் உத்தரவு கடிதம் ந.க.எண்.1054/2014/UPA3 நாள்.12.3.2014ன்படி கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) தனிநபருக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் (25% மான்யம்) USEP | – | 380160 |
| 2) பெண்கள் சுயஉதவிக்குழுவினருக்கான கடன் திட்டம் (35% மான்யம்) UWSP | – | 253439 |
| 3) மகளிர் குழுவிற்கான சுழல் நிதி (TCS) | – | 126721 |
| 4) நகர்ப்புற இளைஞர்களுக்கான திறன்மேம்பாட்டுப் பயிற்சி (STEP-UP) | – | 1407280 |
| 5) நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம் (DWEP) | – | – |
| 6) சமுதாய கட்டமைப்பு பயிற்சி (UCDN) | – | 304127 |
| A & OE | - | 126721 |
| IEC | - | 76032 |
| | | -------- |
| | | 2674480 |
| | | -------- |

இவ்வொதுக்கீட்டின்படி இத்திட்டங்களானது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## 9. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டம்:–

இத்திட்டம் 01.11.2013 முதல் துணை இயக்குநர் (நலப்பணிகள்) உத்தரவின்படி தேவதானப்பட்டி வட்டார மருத்துவ அலுவலருக்கு மாற்றம் செய்யப்பட்டு, தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>10. ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் :–</u>**

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் தேனி அவர்களின் 12.03.2014ல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்த வாய்மொழி உத்தரவின்படியும், பெண் மருத்துவ அதிகாரியின் கடிதம் எண்.6020 நாள்.16.12.2013ன் படியும் JSY திட்டத்தின் கீழ் பிரசவித்த தாய்மார்களுக்கு வழங்கக்கூடிய பிரசவ ஊக்கத் தொகைக்கான நிதியினை ஆணையரின் வங்கி கணக்கிலிருந்து பெண் மருத்துவரின் வங்கி கணக்கிற்கு 30.04.2014 அன்று மாற்றம் செய்து பெண் மருத்துவ அதிகாரி மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**<u>8. ஈமக்கிரியை மான்யம் :–</u>**

2015–2016ம் ஆண்டிற்கு 42 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது. அரசிடமிருந்துநிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற உடன் காசோலை மூலம் நிதி உதவி வழங்க நடவடிக்கையில் உள்ளது.

**<u>குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் :–</u>**

இந்நகராட்சியில் புதைவடிகால் திட்டம் உள்ளதால் கழிப்பறை இணைப்புகள், புதைவடிகால் இணைப்பில் சேர்க்கப்படுகிறது மற்றும் குடிசைப்பகுதிகளில் 10 எண்ணம் கழிப்பறைகள் உள்ளதால் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் ஏதுமில்லை. தற்பொழுது கட்டப்படும் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டம் IHSDP வீடுகளுக்கும் தொடர்ந்து புதைவடிகால் இணைப்பு அளிக்கப்படுகிறது.

**<u>சாக்கடை வசதிகள் :–</u>**

வராக நதியில் நகரில் பல பாகங்களிலிருந்து வந்து கலக்கும் சாக்கடை நீரை நிறுத்தவும், பொது சுகாதாரத்தினை பாதுகாக்கவும் முறையான சாக்கடை திட்டம் வெகு காலமாக நகர்மன்றத்தினரால் வலியுறுத்தப்பட்டது. பலனாக அரசினர் தங்களது 14.7.1965–ம் தேதி 1627 (பொது சுகாதாரம்) எண் ஆணையில் 14.15 லட்சத்ததிற்கு பாதிக்கடன் பாதி மான்யம் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்படி திட்ட வேலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செய்யும்போது திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.23.00 லட்சத்திற்கு தயாரித்து அதனை 29.9.82–ம் தேதிய 1985–ம் எண் (பொதுப்பணித்துறை) அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது IUDM 2011–12 மற்றும் 2012–13ல் ரூ.122 லட்சத்தில் 10.378 கி.மீ. மழைநீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது.

புதைவடிகால் குழாய் நகரில் தென்கரை பகுதியில் 6 கி.மீ. நீளத்திலும் வடகரை பகுதியில் 5 கி.மீ. நீளத்திலும் பதிக்கப்பட்டுள்ளது. குழாய்கள் 6' விட்டம் முதல் 12' விட்டம் கொண்டதாகும். மேற்படி திட்டங்கள் அனைத்து வேலைகளையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முடித்து நகராட்சி பொறுப்பில் ஒப்படைத்தது. மேற்படி திட்டத்தை அவ்வமயம் உள்ளாட்சித்துறை இலாகா அமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர்.கா.காளிமுத்து, எம்.ஏ.,பி.எச்.டி., அவர்களால் 23.12.89ல் முறைப்படி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

புதைவடிகால் திட்டவிதிகளின் கீழ் ஒரு வீட்டிணைப்பிற்காக ரூ.5000/– பொறுப்புத் தொகையும் மதிப்பீட்டு செலவில் 10% ஆய்வு கட்டணமாகவும் வசூல் செய்யப்படுகிறது. இதுவரை நகர்முழுவதும் 6606 இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. நகரின் வடகரையில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. உந்துநிலையத்தில் ஸ்கிரீன் வெல் கிரிட் வெல் ஆகியவைகளில் சுத்தம் செய்யப்பட்டு கலெக்சன் வெல்லில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து 20 மற்றும் 50 மோட்டார் குதிரை திறனுடைய பம்புகள் மூலம் 2 கி.மீ. தொலைவிலுள்ள எண்டப்புளி புதுக்கோட்டை கிராமத்தருகே உள்ள பண்ணைக்கு உந்தப்படுகிறது. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.52.01 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 4.00 கி.மீ. நீளத்திற்கு புதைவடிகால் மெயின் நீடிக்கப்பட்டுள்ளது, மேலும் தற்போது விடுபட்டுள்ள பகுதிகள் 4950 மற்றும் பிரதான குழாய்கள் சரிசெய்யவும், சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் ரூ.26.60 கோடி திட்ட மதிப்பீட்டில், திட்டம் செயல்படுத்த குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 30.03.2015ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. TWAD மேற்பார்வையில் தற்போது திட்டம் நடைபெற்று வருகிறது.

நகராட்சி வடிகால் திட்டத்திற்கென ஒப்புதல் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள்

| | |
|---|---|
| சாக்கடை திட்ட சூயேஜ் கூலி | 5 |
| சாக்கடை திட்ட கிளீனர் | 6 |
| உந்து நிலைய இரவு காவலர் | 1 |
| டிரைனேஜ் கிளீனர் | 2 |
| வடிகால் இணைப்பாளர் | 1 |

**தீ விபத்து :–**

நகரில் திடீரென்று தீ விபத்துக்களை தடுக்க தீயணைப்பு படையினர் தொடர்ந்து வேலை செய்து வருகிறார்கள். மேற்படி நிலையத்தில் ஆம்புலன்ஸ் ஒன்றும், தீயணைப்பு வண்டிகள் இரண்டும் உள்ளன.

**வருவாய் தரும் இனங்கள் :–**

இந்நகர் சுற்று வட்டாரங்களில் பெரும் நகரங்களும் இரும்பு பாதை தொடர்பு இல்லாததாலும், கொடைக்கானல் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளதாலும், நகரினை சுற்றிலும் விளை நிலங்களும், மாந்தோப்புகளும் இருப்பதாலும் புதிதாக வருவாய் தரும் தொழில் ஏதும் ஆரம்பிக்க வழிவகையின்றி உள்ளன.

குறைந்த வருவாய் உடையவர்களுக்கென கட்டப்பட்டுள்ள 22 வீடுகளில் வாடகையாக அறிக்கையாண்டில் ரூ.178426/– பெறப்பட்டுள்ளது.

**பேருந்து நிலையமும், தினசரி வாரச்சந்தையும் :–**

நகர் மன்றத்தினரால் நிர்வகிக்கப்படும் பேருந்து நிலையம், சந்தைகள் முதலியவற்றின் விபரமும், அறிக்கையாண்டில் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. காய்கறி சந்தை | – | 7,05,000 |
| 2. பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | – | 3,94,000 |
| 3. சைக்கிள் ஸ்டான்ட் | – | 1,32,000 |
| 4. திருமண மண்டபம் | – | 1,66,000 |
| 5. புல்பண்ணை | – | 7,35,000 |

| | | |
|---|---|---|
| 6. கட்டண கழிப்பறை | – | 4,11,500 |
| 7. ஆடு மாடு வதை கூடம் | – | 78,750 |
| 8. பலன்தரும் மரங்கள் | – | 2,71,300 |
| 9. இடவாடகை | – | 1,34,557 |
| 10. ஐ.யு.டி.பி. | – | 9,47,448 |
| 11. ஐ.டி.எஸ்.எம்.டி. | – | 17,50,241 |

<u>நகராட்சி சந்தைகள் :–</u>

நகரில் தனியாக நடத்தும் ஆடு வதை செய்யும் நவீன ஆடடி கூடம் இந்நகராட்சி எல்லைக்குள் இருக்கும் தொழில்களை துப்புரவு ஆய்வர்கள் அவ்வப்போது பார்வையிட்டு வருகின்றனர்.

<u>பேருந்து நிலையம் :–</u>

நகரில் பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக தற்போது உள்ள நகரளவு எண்.1808 இடத்தில் உள்ள இடம் போதாது எனக் கருதி மேற்படி இடத்தை சுற்றி சாலைகள் உள்ளதை கருதியும் தற்போதுள்ள சூழ்நிலையில் நகராட்சிக்கு சொந்தமான நகரளவு எண்.1118/2–ம் இடம் பொருத்தமானது எனக்கருதி இரண்டாம் வகுப்பு பேருந்து நிலையம் அமைக்க நகர்மன்றம் தனது 18.11.87–ம் தேதிய தீர்மான எண்.706–ல் தீர்மானித்து மேற்படி இடத்தினை பூங்கா மற்றும் விளையாட்டு இடம் அறிவிப்பிலிருந்து நீக்கம் செய்து கருத்துரு உரிய முறையில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையம் அமைக்க ரு.40 இலட்சம் கடன் கோரியதில் மேற்படி பூங்கா மற்றும் விளையாட்டு திடல் ஏதும் அறிவிப்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பின்பே கடன் வழங்க இயலும் என நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் அறிவித்தார்கள். அரசு தனது 18.4.88ம் தேதிய அரசு ஆணை எண்.401 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையில் பூங்கா உள்ளது. புதிய பேருந்து நிலையம் ரூ.50 இலட்சம் உத்தேச செலவில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு கருத்துரு அரசுக்கு உரிய வழிமுறைகளுடன் சமர்ப்பிக்கப்பட்டதற்கு, தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சி திட்டத்தின் மூலம் ரூ.25 இலட்சம் மட்டும் அனுமதியளிக்கப்பட்டு மேற்படி இடத்தில் முதல் கட்டப்பகுதி கட்டுமானப்பணியே முடிவெடுக்கப்பட்டுள்ளமையால் மேற்படி பேருந்து நிலையத்திற்கு சி கிளாஸ் அந்தஸ்து பெரியகுளம் மண்டல போக்குவரத்து அலுவலர் அவர்களால் 12.2.93–ம் தேதிய ஆர்.எஸ்.32892/93 எண்ணுள்ள கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் பேருந்து நிலையம் 23.8.93 முதல் இயங்கி வருகிறது.

<u>காட்சிக்கடைகளும் திருவிழாக்களும் :–</u>

பிரசுரம் செய்யப்பட்ட விழாக்கள் ஒன்றுமில்லை. நகரில் நடைபெற்ற முக்கிய விழாக்காலங்களில் பொது சுகாதாரம், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>திரைப்பட அரங்கு :–</u>

இந்நகராட்சி எல்லைக்குள் இயங்கி வந்த இரண்டு தனியார் திரையரங்குகள் மூடப்பட்டுவிட்டது. நடப்பாண்டில் கேளிக்கை வரி ஏதும் நகராட்சிக்கு வரப்பெறவில்லை.

**சாலை மரங்களும், பூங்காக்களும் :–**

நகராட்சிக்கு சொந்தமான பலன்தரும் மரங்களின் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.1006300/– வருட வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. மன்றத்தினரால் நிறுவப்பட்ட மூன்று பூங்காக்களும் நகராட்ப் பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

**நில அபிவிருத்தியும், நகரமைப்பு திட்டங்களும் :–**

அம்மையநாயக்கனுார் ரோடு – கம்பம் ரோடு பைபாஸ் நகரமைப்பு திட்டம். அரசு ஆணை எண்.1489, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.9.8.1967ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தென்கரை விஸ்தரிப்பு நகரமைப்பு திட்டம். பகுதி I (மேற்கு) அரசு ஆணை எண்.1297, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.27.5.1971ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரு திட்டங்களுக்குமான நில ஆர்ஜிதம், செய்யத் தேவையான நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**வரை கடப்புகள் :–**

நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து வரைகடப்புகளும் அகற்றும்படி அரசு ஆணை.8 (பத்தாண்டு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.5.1.99–ல் அறிவுரைக்கப்பட்டதற்கிணங்கவும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு டபிள்யு.பி.எண்.689/05 மற்றும் டபிள்யு.எம்.பி.எண்.635/05, 636/05, 637/05 வழக்கின் 2.2.05ம் தேதிய உத்திரவின்படியும் வரைகடப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன.

**வருவாய் தரும் இனங்கள் :–**

நகர்மன்றம் வசூலித்து வரும் நபர் ஒன்றுக்கு சொத்துவரி அறிக்கையாண்டில் ரூ. 112.38 ஆகும்.

அறிக்கையாண்டில் நிலுவை சேர்த்து ரூ. 2422891/– தொழில் வரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது. தொழில் வரிச்சுமை நபர் விகிதப்படி கணக்கிட்டால் நபர் ஒன்றுக்கு சுமார் ரூ.32/– ஆகும்.

நடப்பாண்டில் வரியினங்கள் பேரிலான கேட்புத் தொகை ரூ.2,76,43,860/– மற்றும் வரியற்ற இனங்கள் கேட்புத் தொகை ரூ.6045519/– இக்கேட்பில் முறையே ரூ.2,00,25,481/– மற்றும் ரூ.3666088/– வசூலிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வரி இனங்கள் | – | 72 % |
| வரியற்ற இனங்கள் | – | 60 % |

**நிதி நிலைமை :–**

இந்நகராட்சியில் நிதி நிலைமை கடந்த பல ஆண்டுகளாக போதுமானதாக இல்லை. நடப்பாண்டில் வரவு செலவு திட்டம் ரூ.7135279/– உபரியில் உள்ளது.

**கட்டிட மனுக்கள் :–**

அறிக்கையாண்டில் நகரில் புதிய கட்டிடங்கள் கட்ட மாற்றங்கள் செய்ய அனுமதி கோர வரப்பெற்ற மனுக்கள் விபரம் பின்வருமாறு:–

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | – | இல்லை |
| அனுமதி கோரி வரலான மனுக்கள் | – | 117 |
| மொத்தம் | – | 117 |
| அனுமதி மறுக்கப்படடு திரும்பியவை | – | 13 |
| அனுமதி வழங்கப்பட்டவை | – | 98 |
| நிலுவையில் உள்ளவை | – | – |

**முதலீடுகள் :–**

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் ஆரம்ப இருப்பு | 24157969 |
| முதலீடு செய்யப்பட்ட தொகை | 120936714 |
| மொத்தம் | 145094683 |
| முதலீட்டில் திரும்பப்பெற்றது | 12500000 |
| முடிவு இருப்பு | 108436714 |

**சொத்துவரி வசூல் :–**

2015–2016ஆம் ஆண்டில் புதிதாக வழங்கப்பட்ட வரி விதிப்புகளின் எண்ணிக்கை – 831

நடப்பாண்டில் வரியினங்கள் பேரிலான விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | **கேட்பு** | **வசூல்** | **நிலுவை** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| **நிலுவை** | 2422766 | 419702 | 2003064 | 17 % |
| **நடப்பு** | 10888129 | 10164808 | 723321 | 94 % |

**தொழில் வரி**

நடப்பாண்டில் தொழில்வரி வசூல் விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| **நிலுவை** | 2290163 | 1009960 | 1280203 | 44 % |
| **நடப்பு** | 2903061 | 2422891 | 480170 | 83 % |

தொழில் நிறுவனங்கள் 849

அரசு அலுவலர்கள் 93

அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் பெற்ற கடைகள் – 378

அபாயகரமானதும் அருவருக்கத்தக்க இனங்களுக்கான உரிமம் (DEO) – 378

| | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் |
|---|---|---|---|---|
| டி.&ஓ | 192355 | 192355 | – | 100 % |
| பி.எப்.ஏ | இல்லை | இல்லை | இல்லை | % |

**திடக்கழிவு மேலாண்மை :–**

இந்நகராட்சியில் 24 துப்புரவு பணியாளர்களும் 2 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் துப்புரவு ஆய்வாளர்கள் இருவரும் மற்றும் 3 ஓட்டுனர்கள் பணிபுரிந்தனர் . 2 மினி லாரியும் இரண்டு டம்பர் பிளேசர் வாகனம் இரு டிப்பர் லாரி மூலம் குப்பை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது. நகராட்சிக்கு சொந்தமான 7.98 ஏக்கர் பரப்பில் கலவை உரத்திடல் உள்ளது. அறிக்கையாண்டில் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தினசரி சுமார் 16.M.T குப்பைகள் நகரில் அகற்றப்பட்டு கலவை உரத்திடலில் கொட்டப்பட்டு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கலவை உரத்திடலை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அரசு கடன்களை திருப்பி செலுத்திய விபரம் :–**

இந்நகராட்சி பல ஆண்டுகளாகவே நிதி பற்றாக்குறையாக உள்ள நகராட்சி ஆகும். ஆண்டிற்காண்டு அரசிடமிருந்து வழிவகை முன்பணம் பெற்றுத்தான் செயல்பட்டு வந்தது. கூடுதலாக உள்ள பணியாளர்களில் 25 நபர்களை ஒருவழி மாறுதல் செய்து மேற்படி பணியிடங்கள் குறைக்கப்பட்டு உள்ளது. மேலும், கூடுதலாக உள்ள 43 துப்புரவு பணியாளர்களை பழனி நகராட்சிக்கு ஒருவழி மாறுதல் செய்யப்பட்டு மேற்படி பணியிடங்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 1.10.98 முதல் சொத்துவரி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே இனி வருங்காலங்களில் நிதி நிலைமை சீரடைய வாய்ப்பு உள்ளது. விரைவில் கடன்களை திருப்பி செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் | 1,74,66,130– |
| அசலாக திருப்பி செலுத்திய கடன் தொகை | 13,01,475– |
| ஆண்டிறுதியில் கடன் தொகை | 1,61,64,655– |

**உடமையும் பொறுப்பும் :–**

நகராட்சி உடமையின் மொத்த மதிப்பு ரூ.14,67,60,822/–ஆகவும் பொறுப்பு ரூ.12,85,11,133/– ஆகும்.

**கணிப்பொறி பிரிவு :–**

இந்நகராட்சியில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.06.1999–ம் நாளிட்ட ந.க.எண். 19543/98/OP–1 செயல்முறை உத்திரவின்படி கணினி உதவி திட்ட அமைப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். இந்நகராட்சியில் தற்போது 14 கணினிகள், 4 டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள், 8 லேசர் பிரிண்டர்கள் மற்றும் 3 UPS சாதனங்களும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நகராட்சியின் பணிகளான பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல், வருவாய் இனங்களான சொத்துவரி, தொழில்வரி, குத்தகை, குடிநீர் கட்டணம் ஆகியவற்றின் வசூல் பணி, இதர கட்டண வசூல் (சிட்டா வசூல்), அசையும்

சொத்துகள், அசையா சொத்துகள், கட்டிட அனுமதி வழங்குதல், நகராட்சியின் வரவு–செலவு கணக்குகள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் தொடர்பான பணி தகவல்கள் மற்றும் மின் ஒப்பந்தப்புள்ளி முறை போன்றவை கணினியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் கணினிகளில் இணைய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை, மாவட்ட ஆட்சியர் மற்றும் அனைத்து நகராட்சி அலுவலகங்களுக்கும் கடிதப் போக்குவரத்தில் மின்னஞ்சல் வசதி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியின் மின்னஞ்சல் முகவரி : commr.periyakulam@tn.gov.in

இந்நகராட்சியைப் பற்றிய தகவல்களையும், செய்திகளையும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வசதியாக இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணையதள முகவரி http://municipality.tn.gov.in/periyakulam

**ஆணையாளர்**
**பெரியகுளம் நகராட்சி**

மழைநீர் சேமிப்பீர்

**நகராட்சி நிர்வாகத் துறை**

அனுப்புநர்
திருமதி.அ. மாணிக்க அரசி, எம்.ஏ.,
ஆணையாளர்.
பெரியகுளம் நகராட்சி,
பெரியகுளம்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
மேலகால் பிரதான சாலை, கோச்சடை
மதுரை – 625 016

ந.க.எண். 992/2012/பி3 நாள். 01.06.2016

அய்யா,

**பொருள் :** 2015-16ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மற்றும் நகர்மன்ற தீர்மான நகலினையும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு அனுப்புதல் – தொடர்பாக

**பார்வை :** நகர்மன்றத் தீர்மான எண்.1460, நாள்.30.05.2015

*****

பெரியகுளம் நகராட்சியின் 2015-16ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மற்றும் மன்றத் தீர்மான நகலினையும் இரண்டு பிரதிகள் இத்துடன் அனுபப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி

**இணைப்பு :-**

1) 2015-16ம் ஆண்டு நிர்வாக அறிக்கை – 2 பிரதிகள்
2) மன்றத் தீர்மான நகல் – 2 பிரதிகள்.

**<u>30.05.2015ம் தேதிய பெரியகுளம் நகர்மன்றத் தீர்மான எண்.1460ன் உண்மை நகல்</u>**

‘’’’’

**பொருள் :–** பெரியகுளம் நகராட்சியின் 2015–2016ம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

2015–2016ம் ஆண்டுக்கு தயார் செய்து வைக்கப்பட்டுள்ள நிர்வாக அறிக்கையினை ஒப்புதல் செய்யலாம்.
(ந.க.எண். 992/2015/பி3)

**தீர்மானம்:-** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஓ.ராஜா,
நகர்மன்றத் தலைவர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி

**<u>பெரியகுளம் நகராட்சி</u>**

**<u>நிர்வாக அறிக்கை</u>**

**2015 - 2016**

**<u>பெரியகுளம் நகராட்சி</u>**

**<u>நிர்வாக அறிக்கை</u>**

**2015 - 2016**

**<u>பெரியகுளம் நகராட்சி</u>**

**<u>நிர்வாக அறிக்கை</u>**

**2015 - 2016**

**<u>பெரியகுளம் நகராட்சி</u>**

**<u>நிர்வாக அறிக்கை</u>**

**2014 - 2015**